# குறுந்தொகையில் பெண்ணிய உளப்பகுபாய்வு

*மா. சீத்தாராமன்*
முனைவர் பட்ட ஆய்வாளர்
காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை

*முனைவர் சுஜாதா*
தமிழ்த்துறை தலைவர், தமிழ் உயராய்வு மையம்
ஜி.டி.என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5198

## முன்னுரை

இறைவன் படைப்பில் ஆணும், பெண்ணும் இரு சமமான உயிரிகளாகும். இரண்டு உயிரிகளும் மானுடச் சமுதாயத்தை உருவாக்குகின்றன. மானுடத்தின் உயர்ந்த பண்பு மனிதனை மனிதனாக மதிக்கும் மனிதப் பண்பாகும். ஆனால், பெண்ணை உலகம் சக உயிரியாகக் கூட மதிப்பதில்லை.

பொதுவாகச் சமுகவியல் கோட்பாட்டின்படி ஒத்த தகுதியுடைய இரு கூறுகளிடையே எப்பொழுதும் முரண்பாடுகள் தோன்றிக் கொண்டே இருக்கும். இதனால் தான் ஆண், பெண் என்ற இரண்டு உயிரிகளுக்கிடையே அவை தோன்றிய காலம் முதல் போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. பெண்கள் சந்தித்த வாழ்வியல் போராட்டங்களும் சமூகப் பிரச்சனைகளும் சமூக மறுப்புகளும் பெண்ணியச் சிந்தனைகள் தோன்றக் காரணமாயின. அச்சிந்தனைப் போக்குகள் இயக்கமாக உருவெடுத்தன.

பெண்ணிய இயக்கம் மேலை நாடுகளில் தோன்றியது என்றாலும், பெண்ணியச் சிந்தனையின் தடம் இன்று நேற்று தோன்றியது. அன்று புராணங்களிலேயே அதன் வித்து உள்ளது. இதற்குச் சான்றாக சிவன் பார்வதிக்குத் தன் உடம்பில் பாதியைப் கொடுத்த நிலையைச் சுட்டலாம். அர்த்தநாதீஸ்வரர் ஆண் பெண்ணுக் குச் சம உரிமையைக் கொடுக்க வேண்டும் என்பதைக் குறிக்கும் குறியீட்டுப் பொருண்மையாகும் என்று தத்துவவாதிகள் சுட்டுவர். சமூக நோக்கில் சமத்துவம் நிறைந்த சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நோக்கின் அடிப்படையில் தான் “பெண்ணியம்” என்ற இயக்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் இக் கட்டுரையில் குறுந்தொகையில் பெண்ணிய உளப்பகுப்பாய்வு என்பதனை ஆராயலம்.

### பெண்ணியம் - சொற்பொருள் விளக்கம்

உமனிசம் என்ற சொல் 1889 வரை பெண்களின் உரிமைகளையும், பிரச்சனைகளையும், போராட்டங்களையும் உணர்த்தி 1894 இல் "உமனிசம்" என்ற சொல்லின் இடத்தை "பெமினிசம்" (Faminism) என்ற சொல் பிடித்துக் கொண்டது.

"பெமினிசம்" என்ற சொல் இலக்கிய உலகில் முதலில் பெண்ணின் பாலியல் பண்புகளைக் குறிக்கவும், பெண் உரிமைகளைப் பேசவும் பயன்படுத்தப் பட்டது. "பெமினிசம்" என்ற சொல்லுக்கு (1)பெண்ணின்தன்மைகள், (2)சமூகத்திலும், அரசியலிலும் ஆண்களுக்கு நிகரான உரிமைகளைப் பெற்று தருவதற்கான கோட்பாடு பெண்களின் உரிமைக்காகவும் தேவைகளை நிறைவேற்றவும், பெண்கள் சார்பாக வாதிடுவது என்று அகராதிகள் பலபொருள் விளக்கங்களைத் தருகின்றன

### பெண்ணிய இலக்கியத் திறனாய்வு

பெண்ணியத் திறனாய்வு, பெண்ணிய இலக்கியத்திறனாய்வு, பெண் நிலை நோக்கு (அல்லது) பெண் மையத்திறனாய்வு, பெண் நிலைவாகத் திறனாய்வு போன்ற பெண்ணியத் திறனாய்வு குறித்த தொடர்கள் சிந்திக்கத்தக்கன.

முதலில் மேற்குறிப்பிட்ட அனைத்துத் திறனாய்வுகளும், பெண்களின் பிரச்சனைகளை மையமாகக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. பெண்ணிய இலக்கியத் திறனாய்வு என்பதில் பெண்களின் எழுத்துக்கள் மட்டும் தான் இடம் பெறுமா? பெண்கள் மட்டும் தான் திறனாய்வளர்களாக அமைவார்களா? என்ற வினாக்கள் இன்று பெண்ணிய திறனாய்வில் முன் வைக்கப்பட்டுகின்றன. இங்கு ஒன்றை மட்டும் கவனத்தில் நிறுத்த வேண்டும். பெண்ணிய இலக்கியம் (Feminist Literature) என்பது பெண்களின் படைப்புகளை மட்டும் சுட்டும். ஆனால், பெண்ணியத் திறனாய்வில் இருபாலரின் படைப்புகளும் அடங்கும். பெண்களின் பிரச்சனைகளை ஆண் எழுத்தாளர், பெண் எழுத்தாளர் ஆகிய இருவரின் படைப்புகளும் சித்தரிக்கின்றன. ஆனால், அவற்றைப் படைத்திருக்கும் நிலையிலுள்ள நுன்மையான வேறுபாடுகளைப் பெண்கள் குறித்த ஆணாதிக்க அரசியலை வெளிக் கொணர்வது பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் முக்கிய நோக்கமாக அமையும்.

"சீதையின் சபதம்" என்ற நூல் ஓர் ஆண் படைத்தது. இது பெண்ணுரிமைப் பாலியல் என்ற வகையிலடங்கும். இது போன்ற பெண்ணிய நோக்கிலுள்ள ஆண் எழுத்தாளர் அனைவரின் படைப்புக்களும் பெண்ணிய இலக்கியத் திறனாய்வில் இடம் பெறும்.

### குறுந்தொகையில் உளப்பகுப்பாய்வு

எட்டுத் தொகை நூல்களுள் செறிவும் இனிமையும் மிக்கது குறுந்தொகை ஆகும். "புறத்தே தோன்றும் காட்சிகளைச் செய்யுட்களில் புனைந்து காட்டும் ஆற்றலினும் அகத்தே தோன்றும் கருத்துக்களை உணர்ச்சியும், மெய்ப்பாடும் புலப்பட உரைக்கும் ஆற்றல் சிறந்தது என்று குறுந்தொகையின் சிறப்பினை எடுத்துரைக்கிறார். உ.வே.சாமிநாதர் அக மனப் புரிதல்களுக்கு இடமளிக்கும் பாடல்கள் பலவற்றைக் கொண்டது குறுந்தொகையாகும்.

இக்குறுந்தொகையில் இருப்பதோரு பெண்பாற் புலவர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் எழுதிய குநற்தொகைப் பாடல்கள் மொத்தம் எழுபத்தைந்து என்ற அளவினை எட்டுகிறது. இப்பாடலைப் பெண்ணிய நோக்கில் அணுகுவதாக இக்கட்டுரை அமைகிறது.

குறுந்தொகை அகம் சார்ந்த பாடல்களின் தொகுப்பாகும். இவ்வகப் பாடல்களில் செவ்விய நிலையில் காதல் வெளி ப்படுத்தப் பெற்றுள்ளது. செவ்விய நிலைக்காதல் என்பது ஒருவகையில் பெண்களுக்கு தடைப்படுத்தம் நிலையையும் தகுகின்றது.

செவ்விய நிலைக்காதல் என்பது உரிமைகள் பலவற்றை வழங்குவது என்று பெண்ணியவாதிகள் கருத்துரைத்துள்ளனர்.

தகர்க்க இயலாத சமுதாயச் சுமைகளை உடைக்கும் செவ்விய காதல், பெண்கள் சமத்துவ வாழ்வைப் பெறவும், விடுதலை மிக்க வாழ்வைப் பெறவும், அதிகாரத்தைப் பெறவும், காதல்வழி வகுப்பதாக பெண்ணியத் தத்துவ வாதிகளும் சமுதாயவியல் அறிஞர்களும் கருதுகிறார்கள். இதுவே உண்மையாகும். செவ்விய நிலைக்காதல் என்பது பெண்களுக்கு அவர்களின் உரிமைகளைப் பெறக் குறிக்கத்தக்கப் புள்ளியாகும். இந்நிலையானது பெண்களைப் பேரிழப்பு, நரகம், தியாகம் போன்றவற்றில் இருந்து விடுவிக்கிறது என்கிறார் சுலமித் பையர்ஸ்டோன்.

“காதல் என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே குழந்தைகளைப் பெறுதல், வீடு தோட்டங்களைப் பேணுதல் என்பதை மட்டும் கருதியது அன்று, அது உயிரியல் தேவைகளை மட்டும் நிறைவேற்றுவது அன்று, அது மனிதர்க்கான எதிர்காலத்தை வடிவமைப்பது, மனிதரின் மூளையாற்றலை வெளிப்படுத்தவ அது. பெண்கள் தங்களைத் தாங்களே உணர்ந்து கொள்வதற்கான ஒரு தேடலும் ஆகும்” என்று செவ்விய நிலைக்காதலைப் பெண்களுக்கான சுய தேடலாகக் காண்கிறார் பெட்டி பிரைடன்.

## தலைவனுடன் உடனுறையும் இனிமை

தலைவனும், தலைவியும் காதலித்து மணம் புரிந்து வாழ்கின்ற போது பல உரிமைகளைத் தலைவிக்குத் தலைவன் நல்கி வாழும் வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை ஆகின்றது. ஆனால், இவ்வெற்றிகரமான வாழ்க்கை மிகக் குறைந்த நிலைபாடு உடையனவாகவே குறுந்தொகைச் சூழலில் உள்ளன.

தலைவன் தலைவியை விட்டுப் பிரிகிறான். நீண்ட நாள்கள் ஆகியும் அவன் வந்து சேரவில்லை. தோழி தலைவனின் வாரா இயல்பை எண்ணிக் கவலை கொள்கிறான். அந்நேரத்தில் தலைவி “தலைவர் தனக்குத் தந்தையும் தாயும் போன்ற இயல்பினை உடையவன். அவன் நிச்சயம் நம்மை நாடி வருவார்” என்று கூறித் தோழியைத் தேற்றுகிறாள்.

**“நல் நலம் தொலைய நலம் மிகச் சாஅய்**
**இன்உயிர் கழியனும் உரையல், அவர் நமக்கு**
**அன்னையும் அத்தனும் அல்லரோ?**
**புலவிஅஃது எவனோ, அன்பிலங் கடையே”**

என்ற பாடலில் அன்பின் காரணமாகவே புலவி தோன்றுகிறது என்று தலைவி பேசுகிறாள். இருப்பினும் தலைவன் வராத முறை இங்கு இருக்கத்தான் செய்கிறது.

அள்ளூர் நன்முல்லையாரின் பாடல் ஒன்றில் தலைவி தலைவனுடன் இணைந்து இருக்கும் இரவுப் பொழுது கழிய மெல்ல வைகறை வந்து விடுகிறது. அவ்வைகறை வாள் போல் தோன்றி இருவரையும் பிரிந்தது என்று தலைவி எண்ணுகிறாள்.

**“குக்கூ என்றது கோழி அதன்எதித்**
**வாள்போல் வைகறைவந்தன்றால் எனவே.**

இப்பாடலில் தோள் காதலர் என்பது தலைவன் தலைவியின் நெருக்கத்தைக் காட்டும் பகுதியாகும். வாள் என்பது இருவரின் இணைவைப்பிரிக்கும்வைகறையாகின்றது. இரவு முழுவதும் தலைவனும் தலைவியும் தோள் தோய்ந்து இன்பம் கொண்டனர்.

## வருத்தமிகு வாழ்க்கை

**“நோம் என் நெஞ்சே. நோம் என் நெஞ்சே**
**இமை தீயப்பன்ன கண்ணீர் தாங்கி**
**அமைதற்கு அமைந்த நம் காதலர்**
**அமைவு இலந் ஆகுதல், நோம் என் நெஞ்சே.”**

என்ற காரணத்தால் தலைவி வருத்தம் கொள்கிறாள். காதலிக்கும் வரை அமைதற்கு அமைந்த தன்மை உடைய காதலன், காதலித்துத் திருமணம் ஆன பின்பு அமைவிலர் ஆனதின் காரணம் யாது என்பது தலைவிக்குத் தெரியாகின்றது.

## அகமும் உடல் வருத்தமும்

**“ஆயிரை பரந்தம் அம் தன் பழனத்து**
**ஏந்து ஏழில் மலர நூம்புடை திரள்கால்**

***ஆம்பல் குறுநர் நீர் வேட்டாங்கு இவள்***
***இடைமுலை கிடந்தும் நடுங்கல் ஆனிந்***
***அரியம் ஆகிய காலைப்***
***பெரிய தோன்றினிந் நோகோ யானே".***

என்ற இப்பாடலில் தலைவி மார்பில் உறங்காத நெருக்கம் அற்றவனாகத் தலைவன் விளக்குகிறான். இது கருதி தலைவி வருந்துகிறாள். காதலிக்கும் பொழுது பொறுமையுடன் அனைத்தையும் பொறுத்துக் கொண்டவன் தற்போது அவற்றை மறந்தது ஏனோ என்ற ஏக்கம் இந்த பாடலில் வெளிப்படுகிறது.

அது நன்னீராப் பொய்கை அதனில் நிறை ஆம்பல் மலர்கள் பூத்துக் கிடைக்கின்றன. அதனைப் பறிக்கச் சென்ற ஒருவனுக்குத் தாகம் ஏற்படுகிறது. அப்போது நன்னீர்ப் பொய்கையிலேயே நீர் அள்ளிப் பருகாமல் அவன் வெளிவந்துத் தண்ணீர் தேடி அலைவது போல இருக்கிறதாம். தலைவனின் நிலை, மேலும், கன்னிப் பெண்கள் தொழும் பெருமை உடைய மூன்றாம் பிறைச்சந்திரன் உயரத்தில் தோன்றுதல் போல உயர்வான எண்ணங்களை உடைய தலைவன் தற்போது அவற்றை மறப்பது ஏன் என்று உவமைகளால் தலைவன் தலைவியின் நிலைகளை அடுக்கி மொழிகிறாள் தோழி.

### பொய்யே காமம்

பெண்களின் காதல் இன்ப வேட்கை நிறைவேறாத் தன்மையுடனே இருந்துள்ளது. இதன் காரணமாக பொய்யே காமம் என்று பெண்கள் கருதியுள்ளனர்.

***"காலையும் பகலும் கையறு மாலையும்***
***உளா துஞ்பு யாமமும் விடியலும் என்று இப்***
***பொழுது இடைத்தெரியின் பொய்யே காமம்***
***மா என மடலொடு மறுவில் தோன்றித்***
***தென்றெனத் தூற்றலும் பழியே***
***வாழ்தலும் பழியே பிரிவு தலைவரினே".***

என்ற பாடலில் பெண்ணின் காமம் பொய்யே என்று காட்டப் பெற்றுள்ளது.

### *நிறைவுரை*

குறுந்தொகை அகமன விளக்கம் கொண்ட பாடல்களைக் கொண்ட தொகுப்பாகும். இதனுள் இடம் பெற்றுள்ள பெண்பாற் புலவர் தம் பாடல்கள் குறிக்கத்தக்கச் சிறப்புடைய அவற்றில் பல நுண்பொருள்கள் காணப்படுகின்றன.

செவ்விய நிலைக்காதல் என்பது ஆணுக்கும் பெண்ணுக்குமான உணர்தலை எளிமைப்படுத்தகிறது. இருவருக்கும் உரிமை வழங்குவதாக உள்ளது. ஆணடிமைப் போக்கும் வல்லமை மிக்கதது. இவ்வகையில் செவ்வியல் நிலை காதல் இலக்கியமான குறுந்தொகைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பாடல்கள் பெண்ணுக்கும் ஆணுக்குமான தொடர்பிழையை உண்மை உடையதாக நெருக்கம் மிக்கதாக ஆக்கமுனைகின்றது.

தலைவி தலைவனுடன் இணைந்து தன் இல்லற வாழ்வின் உரிமையுடன் நடத்தினால் அவ்வாழ்க்கை இன்ப வாழ்க்கையாகின்றது. காதலிக்கும் போது அன்பு நிலையில் இருக்கும் தலைவன் அதன்பின் அதனை மறந்து தலைவியையும் மறந்து நிற்கும் நிலையில் அவ்வாழ்க்கை துன்ப வாழ்க்கையாகின்றது. காதல் வாழ்வில் இணைந்த தலைவனும் தலைவியும் பெரும்பாலும் துன்ப வாழ்க்கையையே பெறுவதாக பெண்பாற்புலவர்கள் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். சிற்சில பாடல்களில் இல்லற வாழ்க்கை உரிமை உடையதாக இனிமையாக இருந்துள்ளது. அதிலும் துயரம் எந்நேரமும் நேரலாம் என்ற தடுமாற்றத் தன்மையே காணப்படுகிறது.

இவ்வகையில் தனித்த சிறப்புடையன குறுந்தொகையில் அமைந்தள்ள பெண்பாற் புலவர்தம் பாடல்கள் அவை தனித்த கவனத்துடன் வாசிக்கப்பட வேண்டிய அவற்றில் புதைந்திருக்கும் பெண்ணியக் கூறுகள் பல. இங்கு ஒரு சிலவே காட்டப் பெற்றுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

1. சண்முக சுந்திரம், பெண்ணியம் (ஆய்வுக் கட்டுரைகள் - ப.181)
2. பெண்ணிய இலக்கியத் திறனாய்வு - பக்.7.
3. உளவியல் நோக்கும், போக்கும் - அ.அப்துல்கஹீம் - பக் - 67
4. இளையோர் உளவியல் - அ.அப்துல்கஹீம்
5. குறுந்தொகை - முனைவா.வி.நாகதாசன் - பாடல் - 93 - மருந்திணை (நன்முல்லையார்)
6. குறுந்தொகை - முனைவர் நாகராஜன் - பாடல் 157 - மருதம் - நன்முல்லையார்.
7. குறுந்தொகை - முனைவர் நாகராஜன் - பாடல் 4 - நெய்தல் - காமம் - சேர்குளத்தார்
8. குறுந்தொகை - முனைவர் நாகராஜன் - பாடல் 178 - மருதம் - நெடும் பல்லியத்தை
9. குறுந்தொகை - முனைவர் நாகராஜன் - பாடல் 32